DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE, OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.

SESSIONS CASE NO.574/2018

DEPOSITION OF WITNESS 14 FOR PROSECUTION..

| | |
|---|---|
| Name | : திரு தனசேகரன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 15.11.2019.

மு.வி.

நான் தற்போது திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிபதியாக பணி செய்து வருகிறேன். கடந்த 28.5.2018ம் தேதி உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.2 ஆக பணிசெய்தபோது எழுமலை வட்ட காவல் ஆய்வாளர் சாட்சிகள் இளையராஜா, லோகராணி மற்றும் அறிவழகன் ஆகியோர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்ய கோரி வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அந்த வேண்டுகோள் கடிதம் அன்றே கு.ப.ம.வ.எண்.3292/2018ல் கோப்புக்கு எடுக்கப்பட்டு சாட்சிகளை 29.5.2018ம் தேதி ஆஜர் படுதத அழைப்பாணைகள் வழங்கப்பட்டது. அழைப்பாணைகள் அ.சா.ஆ.15 மற்றும் அ.சா.ஆ.16. சாட்சிகள் இளையராஜா மற்றும் லோகராணி 29.5.208ம் தேதி ஆஜர்படுத்தப்பட்டார்கள். இளையராஜாவிடம் மதியம் 12.20 மணிக்கும் லோகராணியிடம் மதியம் 12.55 மணிக்கும் வாக்குமூலங்கள் பதிவு செய்ய ஆரம்பித்தேன். சாட்சிகள் தன்னிச்சையாகவும், விருப்பத்துடனும் வாக்குமூலம் கொடுக்கிறார்களா என அறிய சில கேள்விகளை கேட்டேன். அவர்கள் அளித்தபதிலில் இருந்து அவர்கள்

தன்னிச்சையாகவும் விருப்பத்துடனும் வாக்குமூலம் கொடுக்கிறார்கள் என உறுதி செய்துக்கொண்டு இருவர்களிடமும் வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி இளையராஜாவின் வாக்குமூலத்தை 12.45 மணிக்கும் லோகராணியின் வாக்குமூலத்தை 1.10 மணிக்கும் பதிவு செய்து முடித்தேன். அவர்களுடைய வாக்குமூலங்கள் வெளி நபர்கள் யாரும் பார்க்காதவாறும் கேட்காதவாறும் நான் சொல்ல சொல்ல தட்டச்சரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அந்த வாக்குமூலங்கள் அவர்களுக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. அதன்பிறகு அந்த வாக்குமூலங்களை புலன்விசாரணை அதிகாரி , புலன்விசாரணைக்குபயன்படுத்தவேண்டுமென்றும், இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படும்வரை இந்த வாக்குமூலங்கள் பற்றி பொது மக்கள் யாரிடமும் தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் அவருக்கு வாக்குமூலங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்கப்பட்டது. மற்றொரு சான்றிட்ட நகல்கள் சீலிடப்பட்ட கவரில் வைத்து நீதிமன்றத்தில் வைக்கப்பட்டது. அசல் வாக்குமூலங்கள் வழக்குகோப்பில் வைக்கப்பட்டது. இளையராஜாவிடம் பெறப்பட்ட வாக்குமூலம் அ.சா.ஆ.17. லோகராணியிடம் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் அ.சா.ஆ.18. இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டு அவைகள் 7.6.2018ம் தேதி விடிவு எண்.669/2018 மூலம் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. சாட்சி அறிவழகனுக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணை அவர் மகாராஷ்ட்ராவில் வசித்துவந்தபடியால் அவருக்கு சார்பு செய்யமுடியவில்லை என்று மீண்டும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதனால் சாட்சி அறிவழகன் சம்மந்தப்பட்ட வேண்டுகோள் கடிதம் முடிக்கப்பட்டது.

கு.வி. எதிரி தரப்பில்- இல்லை.

ஒப்பம். தனசேகரன், நீதித்துறை நடுவர்.

ஒப்பம். ளளள, முதன்மை அமர்வு நீதிபதி, மதுரை.